RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 123 | மே.10 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# புதிய அரசுக்கு வாழ்த்துகள் நிலையான ஆட்சியே விருப்பம்

சென்னை: மே.10-

புதிய அரசுக்கு வாழ்த்துகள் என்று திமுக தலைவர் ஸ்டாலின் வாழ்த்து கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவு;

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பு, நடக்கும் நிகழ்வுகளை நீங்கள் பார்க்கிறீர்கள். எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை கிடைக்காத வகையில் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அமைந்திருந்தன. ஆட்சி அமைக்கும் அளவுக்குப் பெரும்பான்மை இடங்களைத் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி பெறவில்லை என்றாலும், குறிப்பிடத்தக்க வாக்குகளை நாம் பெற்றுள்ளோம்.

நான் ஏற்கனவே பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில், புதிய ஆட்சி அமைவதற்கு இடையூறாக இருக்க மாட்டோம் என்றும், ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாக திமுக செயல்படும் என்றும் சொல்லியிருந்தேன்.

அதன்பின், என் தலைமையில் நடந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், முடிவெடுக்கும் பொறுப்பை எனக்குக் கொடுத்தார்கள். அந்தக் கூட்டத்தில், “கட்சியின் நலனை மனதில் வைத்து, தலைமைக் கழக நிர்வாகிகளுடன் கலந்து பேசி முடிவெடுப்பேன்” எனத் தெரிவித்தேன்.

ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை யாருக்கும் கிடைக்காத நிலையில், மாற்று யோசனைகளைப் பலரும் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை, தோழமைக் கட்சிகள் எந்த முடிவை எடுத்தாலும் அவர்களின் முடிவை மதித்து ஒருங்கிணைந்து செயல்பட்டு, நிலையான ஆட்சி அமைய வேண்டும்; இன்னொரு தேர்தலுக்கு வழி வகுத்துவிடக் கூடாது என்பதே எனது எண்ணமாக இருந்தது.

எங்களது கூட்டணியைச் சார்ந்த தோழர்கள், “இன்றைய நெருக்கடியான சிக்கலைத் தவிர்க்க, நாங்கள் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்தாலும், கொள்கை அடிப்படையில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்கிறோம்”



என்று அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

தி.மு.க., ஆதரவுடன் அ.தி.மு.க., ஆட்சி கனிமொழி எதிர்ப்பால் கைவிடப்பட்டது

கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற காங்கிரஸ் எம்எல்ஏக்கள் நன்றி தெரிவிக்க அறிவாலயம் வரவில்லை. ஒரே நாளில் திமுகவுடனான உறவை முறித்துக் கொண்டு காங்கிரஸ் கட்சி சென்றது.

அதேசமயம் தமிழகத்தின் உரிமைகளுக்காகவும் மக்கள் நலனுக்காகவும் தொடர்ந்து திமுகவுடன் கைகோத்துப் போராடுவோம் என்று கம்யூனிஸ்ட் தலைவர்கள் சண்முகம், வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் அவர்களும் அறிவித்துத் தோழமை உணர்வை வெளிப்படுத்தியுள்ளது, கொள்கையில் வலுவாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது.

இந்நேரத்தில் மிக முக்கியமான சோதனைக் காலத்தில் உறுதியுடன் உடன் நின்ற தோழமை இயக்கத் தலைவர்கள் காதர் மொகிதீன், வைகோ, பிரேமலதா, ஜவாஹிருல்லா, ஈஸ்வரன், தமிமுன் அன்சாரி உள்ளிட்ட அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் உறுதிக்கு எத்தகைய நன்றியும் பாராட்டும் பொருந்தும்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் வளர்த்தெடுத்து, தமிழகத்தை வளப்படுத்தியிருக்கிறோம். ஏராளமான திட்டங்களின் மூலமாக ஒவ்வொரு தனி மனிதரும் நன்மை அடைய வழிவகை செய்துள்ளோம்.

தொலைநோக்குச் சிந்தனையும், வளமான திட்டமிடலும் கொண்ட அந்தத் திட்டங்களை அமைய இருக்கும் புதிய அரசு தொடர வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட விருப்பமாகும்.

மகளிர், இளைஞர்கள், மாணவர்கள், குழந்தைகள், விளிம்புநிலை மக்கள், அரசு ஊழியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய அனைத்துத் திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்தினால் மக்களுக்கு நன்மைகள் தொடரும்; மாநிலமும் வளரும். இதனைக் கவனத்தில் கொண்டு புதிய அரசு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைய இருக்கும் புதிய அரசுக்கு மீண்டும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஸ்டாலின் கூறியுள்ளார்.

## தமிழக முதல்வராக தவெக தலைவர் விஜய் இன்று பதவியேற்பு!

சென்னை: மே.10-

ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை எண்ணிக்கையுடன் ஆளுநர் ராஜேந்திர அர்லேகரை, தவெக தலைவர் விஜய் நேற்று (சனிக்கிழமை) மாலை சந்தித்ததை அடுத்து, ஆளுநர் அவரை ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்துள்ளார். இந்த அழைப்பை அடுத்து இன்று காலை 10 மணிக்கு சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் விஜய் முதல்வராக பதவியேற்பது உறுதியாகியுள்ளது.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 234 தொகுதிகளில், விஜய் தலைமையிலான தவெக 108 இடங்களில் வெற்றி பெற்றது. இதில், விஜய் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றதால் ஒரு தொகுதியை ராஜினாமா செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. இதன் காரணமாக தவெகவின் எண்ணிக்கை 107 ஆக குறையும். ஆட்சி அமைக்க 118 எம்எல்ஏக்களின் எண்ணிக்கை தேவை எனும் நிலையில், காங்கிரஸ், சிபிஐ, சிபிஎம், விசிக, ஐயுஎம்எல் ஆகிய கட்சிகளின் ஆதரவைக் கேட்டு விஜய் கடிதம் எழுதி இருந்தார்.

அதன் பேரில், முதல் கட்சியாக காங்கிரஸ் தனது ஆதரவை அறிவித்தது. காங்கிரஸ் கட்சிக்கு 5 எம்எல்ஏக்கள் உள்ளதால், தவெக தலைமையிலான கூட்டணியின் பலம் 112 ஆக அதிகரித்தது. இந்நிலையில், சிபிஐ மற்றும் சிபிஎம் கட்சிகள் நேற்று தங்கள் ஆதரவை அறிவித்தன. அந்த இரு கட்சிகளுக்கும் தலா 2 எம்எல்ஏக்கள் உள்ளதால், பலம் 116 ஆக உயர்ந்தது.

இதன் தொடர்ச்சியாக, இன்று மாலை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும் தங்கள் ஆதரவை அறிவித்தன. இவ்விரு கட்சிகளுக்கும் தலா 2 எம்எல்ஏக்கள்



இருப்பதால் பலம் 120 ஆக அதிகரித்தது. இதன் காரணமாக தவெக பெரும்பான்மை பலத்தை பெற்றது.

இதையடுத்து, ஆளுநரைச் சந்திக்க விஜய் தரப்பில் அனுமதி கோரப்பட்டது. இன்று இரவு 7.20 மணிக்கு விமானம் மூலம் கேரளா செல்ல திட்டமிட்டிருந்த ஆளுநர் அர்லேகர், விஜய் ஆட்சி அமைப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு தனது பயணத்தை ரத்து செய்தார். மேலும், மாலை 6.30 மணி அளவில் சந்திக்க விஜய்க்கு அவர் நேரம் ஒதுக்கினார்.

இதன் பின்னர், ஆளுநரை நேரில் சந்தித்த விஜய், பெரும்பான்மை பலம் இருப்பதற்கான கடிதங்களை நேரில் வழங்கி ஆட்சி அமைக்க உரிமை கோரினார். விஜய் உடன் கூட்டணி கட்சித் தலைவர்களான காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சிபிஎம் மாநில செயலாளர் சண்முகம், சிபிஎம் மூத்த தலைவர் கே.பாலகிருஷ்ணன், சிபிஎம் எம்பி சு.வெங்கடேசன், விசிக எம்எல்ஏ வன்னி அரசு உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

விஜய்க்கு பெரும்பான்மை பலம் இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்ட ஆளுநர், அவரை ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்தார். இதையடுத்து இன்று காலை 10 மணியளவில் விஜய் பதவியேற்பது உறுதியானது. சென்னை நேரு விளையாட்டரங்கில் பதவியேற்பு விழா நடைபெற உள்ளது.

தாமதத்துக்கான காரணம் குறித்து ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் கூறியதாவது:

சட்டப்பேரவைத் தேர்தலில் 108 தொகுதிகளில் வெற்றிபெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த தவெக, அதன் அடிப்படையில் ஆட்சி அமைக்க உரிமை கோரி இருந்தால் ஆளுநர் அப்போதே அதற்கு சம்மதம் தெரிவித்திருப்பார். விஜய்யும் உடனடியாக முதல்வர் பதவியை ஏற்றிருப்பார். ஆனால், கூட்டணி ஆட்சி அமைக்க இருப்பதாகவும் காங்கிரஸ் கட்சியின் 5 எம்எல்ஏக்கள் ஆதரவு தங்களுக்கு இருப்பதாகவும் கூறி விஜய் தனது முதல் கடிதத்தை ஆளுநரிடம் வழங்கினார்.

கூட்டணி ஆட்சி என கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததால், போதிய பெரும்பான்மை இல்லாததை ஆளுநர் சுட்டிக்காட்டினார். போதிய பெரும்பான்மையுடன் வந்தால் உடனடியாக ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பதாகவும் அவர் கூறினார். பெரும்பான்மையை திரட்டுவதில் விஜய்க்கு ஏற்பட்ட தாமதம் காரணமாக, ஆளுநர் அழைப்பு விடுக்காமல் இருந்தார். இன்று பெரும்பான்மை கிடைத்ததை அடுத்து ஆளுநர் விஜய்க்கு ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்தார். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## வி.சி.க.வை தொடர்ந்து த.வெ.க.வுக்கு ஆதரவு வழங்கியது ஐ.யூஎம்.எல்.

சென்னை, மே.10-

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றியது. த.வெ.க.வுக்கு காங்கிரஸ் கட்சியின் 5 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு கொடுத்திருந்தாலும், ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்பதை சுட்டிக்காட்டி, த.வெ.க.வை ஆட்சியமைக்க தமிழக பொறுப்பு கவர்னர் அர்லேகர் அழைப்பு விடுக்கவில்லை.

இதையடுத்து, பெரும்பான்மைக்கு தேவையான ஆதரவை திரட்டும் முயற்சியில் த.வெ.க. ஈடுபட்டது. தங்களுக்கு ஆதரவு வழங்குமாறு தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள வி.சி.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்(ஐ.யூ.எம்.எல்.) ஆகிய கட்சிகளுக்கு த.வெ.க. அழைப்பு விடுத்தது.

த.வெ.க.வின் அழைப்பை ஏற்று, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய இரு கட்சிகளும் விஜய்க்கு நிபந்தனையற்ற ஆதரவு




கொடுப்பதாக அறிவித்தன. அதே சமயம், ஐ.யூ.எம்.எல். கட்சி தி.மு.க. கூட்டணியிலேயே தொடர்வதாகவும் த.வெ.க.வுக்கு ஆதரவு கொடுக்கவில்லை என்றும் அறிவித்தது.

பெரும்பான்மைக்கு இன்னும் 2 இடங்கள் தேவை என்ற நிலையில், த.வெ.க. தரப்பில் இருந்து வி.சி.க. தலைவர் திருமாவளவனிடம் ஆதரவு கோரப்பட்டது. வி.சி.க. தலைவர் திருமாவளவன், தங்கள் கட்சி நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவை அறிவிப்பதாக கூறியிருந்தார். நேற்று காலை வி.சி.க.வின் நிலைப்பாடு குறித்த அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வி.சி.க. தரப்பில் இருந்து மாலை 4 மணியளவில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, த.வெ.க. மூத்த நிர்வாகி ஆதவ் அர்ஜுனா, இன்று வி.சி.க. தலைவர் திருமாவளவனை சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது த.வெ.க.வுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தெரிவித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் கடிதம் வழங்கப்பட்டது. இதன் மூலம் த.வெ.க. தலைவர் விஜய்க்கு பெரும்பான்மைக்கு தேவையான ஆதரவு கிடைத்துள்ளது.

இந்த நிலையில், வி.சி.க.வை தொடர்ந்து தற்போது ஐ.யூ.எம்.எல். கட்சியும் த.வெ.க.வுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது. ஐ.யூ.எம்.எல். கட்சியின் ஆதரவு கடிதத்தை த.வெ.க. நிர்வாகிகள் செங்கோட்டையன், அருண்குமார் உள்ளிட்டோர் பெற்றுக்கொண்டனர். இதன் மூலம் த.வெ.க.வின் ஆதரவு எண்ணிக்கை 120 ஆக உயர்ந்துள்ளது.

தொடர்ந்து த.வெ.க. தலைவர் விஜய், கவர்னரை சந்தித்து ஆதரவு எண்ணிக்கையை காண்பித்து ஆட்சியமைப்பதற்கான உரிமையை கோர உள்ளார். கவர்னர் ஆட்சியமைக்க அழைக்கும் பட்சத்தில் விஜய் தமிழகத்தின் முதல்அமைச்சராக பதவியேற்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாக்களித்த மக்களும், ஆதரவாளர்களும் அமைதி காக்க வேண்டும் என்று விஜய் செய்தி வெளியிட வேண்டும் : தமிழிசை

சென்னை, மே.10-

காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவை பெற்றுள்ள தவெகவுக்கு தற்போது வரை 116 இடங்கள் உள்ள நிலையில், ஆட்சியமைக்க இன்னும் 2 இடங்கள் தேவை என்ற நிலை உள்ளது. 2 இடங்களை வைத்துள்ள விசிக, தனது நிலைப்பாட்டை இன்று மாலை அறிவிப்பதாக தெரிவித்துள்ளது. தொடர்ந்து விஜய் முதல்அமைச்சராவதில் சிக்கல் நீடித்து வருகிறது.

இந்த நிலையில் வாக்களித்த மக்களும், ஆதரவாளர்களும் அமைதி காக்க வேண்டும் என்றும் எந்த ஒரு ஆபத்தான முடிவுக்கும் வரக்கூடாது என்றும் விஜய் செய்தி வெளியிட வேண்டும் என்று தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டில் புதிய ஆட்சி அமைய வேண்டும் என்பதில்



அத்தனை பேருக்கும் அக்கறை இருக்கிறது... அந்த ஆட்சி நிலையானதாகவும் இருக்க வேண்டும் என்பதிலும் அக்கறை இருக்கிறது... அதற்கான அடிப்படை நடவடிக்கைகள் தமிழக அரசியலில் நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதும் உண்மை... மக்களின் தீர்ப்பு மதிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. அதனால் தான் பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதும் உண்மை...

ஆனால் ஆக்கபூர்வமாகவும் உண்மை பூர்வமாகவும் எதிர்கொள்ள வேண்டிய இன்றைய அரசியல் சூழலை, உணர்ச்சிபூர்வமாக மாற்றி பல தொண்டர்கள் நடந்து கொள்வது கவலை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. விடுதலை சிறுத்தைகள் கட்சி வாசலில் சகோதரர் ஒருவர் பிளேடால் வெட்டிக் கொள்வதும், வள்ளியூரில் ஒருவர் தீக்குளிக்க முயன்று ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் கவலையளிக்க கூடியதாக இருக்கிறது.

உடனடியாக தனது ஆதரவாளர்களுக்கு விஜய் ஒரு செய்தியை வெளியிட வேண்டும் தங்களுக்கு வாக்களித்த மக்களும், ஆதரவாளர்களும் அமைதி காக்க வேண்டும் என்றும் எந்த ஒரு ஆபத்தான முடிவுக்கும் வரக்கூடாது என்பதையும் அன்பான வேண்டுகோளாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



## நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே தேவாலா அன்னை வேளாங்கன்னி தட்டச்சு பயிற்சி மையத்தில் இலவச பொது மருத்துவம் மற்றும் கண் பரிசோதனை முகாம்

பந்தலூர் மே 10-

நீலகிரி மாவட்டம் கூடலூர் நுகர்வோர் மனித வள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம், இந்திய செஞ்சிலுவை சங்க மருத்துவக் குழு, அன்னை வேளாங்கன்னி தட்டச்சு பயிற்சி மையம், ஆல் தி சில்ரன் ஆகிய இணைந்து நடத்திய இந்த இலவச மருத்துவ மற்றும் கண் பரிசோதனை முகாமிற்கு அன்னை வேளாங்கன்னி தட்டச்சு பயிற்சி மைய முதல்வர் எபினேசர் தலைமை தாங்கினார். கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம், ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் தட்டச்சு பயிற்சி மைய ஆசிரியர் தனுஷ்கா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் செஞ்சிலுவை சங்க மருத்துவ குழு மருத்துவர் ஜேன் மார்டினெஸ் தலைமையில் மருந்தாளுநர் நவீன், செவிலியர் சுமதி, நிர்வாக அலுவலர் லாய்சன் உள்ளிட்ட குழுவினர் ரத்த அழுத்தம், ரத்த சர்க்கரை பரிசோதனை மற்றும் பொது மருத்துவ சிகிச்சைகள் அளித்தனர். தேவை உள்ளவர்களுக்கு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. அதுபோல கண் மருத்துவர் பிரவின் தலைமையிலான கண் தொழில்நுட்ப உதவியாளர் பாக்யா அடங்கிய குழுவினர் கிட்டப்பார்வை, தூரப்பார்வை பரிசோதனை உள்ளிட்ட கண் பரிசோதனைகள் மேற்கொண்டனர். கிட்ட பார்வை பாதிப்பு உள்ள 55 பேர்களுக்கு இலவச கண் கண்ணாடிகள் வழங்கினார்.15 பேர் கண்புரை அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரை செய்யப்பட்டது. முகாமில் பயிற்சி மைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மே 11 தேதி முதல் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

உதகை மே.10-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026, இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கை வெளியிடப்பட்டு தேர்தல் நடவடிக்கைகள் முடிந்து தற்போது தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதைத் தொடர்ந்து 11.05.2026 முதல் பிரதிவாரம் திங்கள்கிழமை தோறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெறும். ஆகவே பொதுமக்கள் தங்களது கோரிக்கை தொடர்பான மனுக்களை அளித்து பயன் பெறலாம் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.



■ மெய்யூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவ மாணவிகளின் V.குணஸ்ரீ என்ற மாணவி 500 மதிப்பெண் அடுத்து இரண்டாவது மூன்றாவது இடங்களை மாணவிகளே மெய்யூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் முன்னிலை பெற்றனர்.தலைமையாசிரியர் K .கோவிந்தராஜன்பள்ளி மேலாண்மை குழு தலைவர் V.நதியா விஜயகாந்த்முதுகலை ஆசிரியர் குமார்.மற்றும் ஜெயக்குமார் சாத்ராக் ஆகிய ஆசிரியர்கள் கலந்து கொண்டு கேக் வெட்டி மாலை அணிவித்து தேர்ச்சி பெற்ற மாணவிகளை உற்சாகப்படுத்தினர் தலைமை ஆசிரியர் ஆசிரியர்களின் கடின உழைப்பால் 100%இது மெய்யூர் அரசு பள்ளிக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி தமிழக அரசுக்கு ப ள்ளிக் கல்வித்துறைக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்



## பாண்டேஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 94.44 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே.10-

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பாண்டேஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 72 மாணவ மாணவிகள் தேர்வு எழுதியதில் 94.44 சதவீதம் பெற்று 68 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.முதல் இடம் ஆர்.கிருத்திகா 494 மதிப்பெண்களும் இரண்டாமிடம் எஸ்.சஷ்டிகுமார் 485 மதிப்பெண்களும், மூன்றாமிடம் வி.சேதுபதி 477 மதிப்பெண்களும் பெற்று உள்ளனர். பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ மாணவிகளையும் தலைமை ஆசிரியர் பாரிவளவன், உதவி தலைமை ஆசிரியர் ஏ.ராஜதிலகம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம், பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட சகஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்தினர்.



## செங்குன்றம் கேபிசி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு பொதுதேர்வில் 98 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே.10-

மாதவரம் தொகுதி பொன்னேரி கல்வி மாவட்டம் செங்குன்றம் கேபிசி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 316 மாணவிகள் தேர்வு எழுதினர். இதில் 98 சதவீதம் பெற்று 309 மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.முதல் இடம் விஸ்வவர்ஷினி 559 மதிப்பெண்களும் இரண்டாம் இடம் பி.அமிர்தவர்ஷினி 549 மதிப்பெண்களும் மூன்றாம் இடம் ஆர்.ஜே. அஃப்ரீன் பானு 538 மதிப்பெண்களும் பெற்று உள்ளனர். பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவிகளையும் பாராட்டி தலைமை ஆசிரியர் அமுதா, உதவி தலைமை ஆசிரியர், பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவினர் உள்ளிட்ட சக ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்தினர்.



## வடகரை அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி 12ம் வகுப்பு பொதுதேர்வில் 86 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே.10-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சியில் இயங்கிவரும் அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பொது தேர்வில் மொத்தம் 84 மாணவர்கள் தேர்வு எழுதினர்.அதில் 86 சதவீதம் பெற்று 72 மாணவர்கள் தேர்ச்சி பெற்று உள்ளனர்.முதல் இடம் கார்த்திக் 474 மதிப்பெண்கள், இரண்டாம் இடம் தோழரசன் 448, மூன்றாம் இடம் அபிசன் 444 மதிப்பெண்கள் பெற்று உள்ளனர். பொது தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களையும் வெகுவாக பாராட்டி தலைமை ஆசிரியர் கிருஷ்ணன்குட்டி மற்றும் உதவி தலைமை ஆசிரியர் பூவராகன் மற்றும் பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் உள்ளிட்ட சக ஆசிரியர்கள் வாழ்த்தினார்.



## சில்ரன்ட்ஸ் பேரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே.10-

மாதவரம் தொகுதி பொன்னேரி கல்வி மாட்டத்திற்குட்பட்ட சோழவரம் ஊராட்சி ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ. நகர் சில்ரன்ட்ஸ் பேரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் மொத்தம் 152 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர். இதில் 100 சதவீதம் பெற்று 152 மாணவமாணவிகளும் தேர்ச்சி பெற்று உள்ளனர். எஸ்.லிங்கேஷ்வரன் 586 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும், எஸ்.பிரியதர்ஷினி 584 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடமும், ஆர்.யோகேஸ்வரன் 582 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடமும் பெற்றுள்ளனர்.தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவமாணவிகளையும் பள்ளியின் தாளாளர் என்.ராஜன், செயலாளர் விஜயா உள்ளிட்ட ஆசிரிய ஆசிரியைகள் பாராட்டி வாழ்த்தினர்.



## ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பரதஷேத்ரா பரதநாட்டிய பள்ளியின் சலங்கை பூஜை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது

ராணிப்பேட்டை மே.10-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பரதஷேத்ரா பரதநாட்டிய பள்ளியின் சலங்கை பூஜை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு பரதநாட்டிய குரு சரஸ்வதி பாபு தலைமை தாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக பொன். கு. சரவணன், கே. எம். பாலு, விமல். நந்தகுமார், பெல். பிரபு, கணேஷ், டார்லிங் பாஸ்கர், தங்கபாண்டியன், ம. சேட்டு, ஜெய் மாருதி சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவிகளுக்கு சால்வை அணிவித்து நினைவு பரிசு வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். முன்னதாக நடராஜருக்கு சிறப்பு பூஜைகள் செய்து பரதநாட்டிய நிகழ்ச்சி துவங்கப்பட்டது. இதில் பல்வேறு பாடல்களுக்கு நாட்டியமாடிய குழந்தைகள் இறுதியில் பானை மீது நின்றும், தட்டின் மீது நின்றும் நடனமாடிய காட்சி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. பரதநாட்டிய குரு சரஸ்வதி பாபு மாணவிகள் நன்றி தெரிவித்தனர். இதில் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## "விஜய் ஆட்சி அமைத்தால் தமிழகத்துக்கே பேரழிவு" டிடிவி தினகரன் காட்டம்

சென்னை: மே,10-

"முதல்வராகி ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர்கள், முதல்வராகவே ஃபோர்ஜரி செய்கிறார்கள். ஒரு எம்எல்ஏ தானே என மிரட்ட நினைத்திருக்கலாம். குதிரை பேரம் செய்யவே இப்படி செய்திருக்கின்றனர்" என அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.சென்னையின் அவர் இன்று அடையாறில் இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "காமராஜ் கையெழுத்திட்டதாக வெளியான வீடியோ எங்கு எடுக்கப்பட்டது? காமராஜ் கையெழுத்திடுவது போன்ற வீடியோவை எடுத்தது யார்? விஜய்யா, ஆனந்தா, செங்கோட்டையனா?

அந்த வீடியோ ஏஐ ஆக கூட இருக்கலாம். ஏஐ மூலம் என்ன வேண்டுமானாலும் உருவாக்கலாம். நகல் கடிதத்தை ஆளுநரிடம் கொடுத்தபோது, அசல் கடிதம் எங்கே என அவர் கேட்டிருக்கிறார். அதற்கு தவெகவினர் தருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டனர். அது மோசடி வீடியோ என ஆளுநரிடம் கூறிவிட்டோம்.முதல்வராகி ஊழலை ஒழிப்போம் என்று சொல்பவர்கள், முதல்வராகவே ஃபோர்ஜரி செய்கிறார்கள். தவெகவினர் என்னை மிரட்ட, பயமுறுத்தப் பார்க்கின்றனர். எனது ஒப்புதலுடன் கடிதம் கொடுக்கப்பட்டதாகக் கூறி குழப்பத்தை ஏற்படுத்த பார்க்கின்றனர். என்னை பயமுறுத்தலாம் என பார்க்கின்றனர். எவ்வளவோ நெருக்கடிகளைப் பார்த்தவன் நான். போலி ஆதரவு கடிதம் விவகாரத்தை சும்மா விடமாட்டேன்.தீயசக்தி எல்லாம் தாண்டி தற்போது தவெக தமிழ்நாட்டுக்கு அழிவு சக்தியாக வந்து நிற்கிறது. தமிழ்நாட்டை அழிக்க வந்த சக்தி. ஆட்சிக்கு வரும் முன்பே திமிராக, அகங்காரமாக ஒரு எல்எல்ஏ தானே என மோசடி கடிதம் தருகிறார்கள். ஒரு எம்எல்ஏ தானே என மிரட்ட நினைத்திருக்கலாம். குதிரை பேரம் செய்யவே இப்படி செய்திருக்கின்றனர். விஜய் ஆட்சி அமைத்தால், அது தமிழகத்துக்கு பேரழிவை ஏற்படுத்தும். ஆட்சி அமைக்கவே இவ்வளவு ஃபோர்ஜரி வேலைகள் செய்கிறார்கள்" என்று தினகரன் கூறினார்.

## "9 போர்களை தடுத்து நிறுத்தியுள்ளேன்" ட்ரம்ப் பெருமிதம்

வாஷிங்டன்: மே,10-

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே மூன்று நாட்களுக்கு தற்காலிக போர்நிறுத்தம் அமலுக்கு வந்துள்ள நிலையில், இந்த மோதலை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவந்து, தான் தீர்த்து வைத்த பத்தாவது போராக இதை மாற்ற விரும்புவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தத் தற்காலிக அமைதி நீண்ட காலப் போர்நிறுத்தத்துக்கான தொடக்கமாக அமையும் என்று நம்பிக்கை தெரிவித்தார். இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியனின் வெற்றியை நினைவுகூரும் வகையில் ரஷ்யாவில் கொண்டாடப்படும் வெற்றி தினத்தை முன்னிட்டு, மே 9, 10 மற்றும் 11 ஆகிய மூன்று நாட்களுக்குப் போர்நிறுத்தம் செய்ய இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.இந்தப் போரில் உக்ரைனுக்கும் முக்கியப் பங்கு இருந்ததைச் சுட்டிக்காட்டிய ட்ரம்ப், தனது நேரடி வேண்டுகோளை ஏற்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் மற்றும் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி ஆகியோர் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக கூறினார்.இந்த மூன்று நாள் போர்நிறுத்தத்தின் ஒரு பகுதியாக, இரு நாடுகளும் தலா 1,000 கைதிகளைப் பரிமாறிக் கொள்ளவும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. உக்ரைன் போர் குறித்து கவலை தெரிவித்த ட்ரம்ப், "இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மனித உயிரிழப்புகள் அதிகம் ஏற்பட்ட மிக மோசமான போர் இது. இந்தப் போரில் மாதந்தோறும் ஆயிரக்கணக்கில் இளம் வீரர்கள் கொல்லப்படுகின்றனர். நான் ஏற்கனவே எட்டு அல்லது ஒன்பது போர்களைத் தீர்த்து வைத்துள்ளேன். இந்தப் போரை நான் முடிவுக்குக் கொண்டுவரும் பத்தாவது போராகப் பார்க்க விரும்புகிறேன்" என்று ட்ரம்ப் கூறினார். இந்த மூன்று நாள் போர்நிறுத்தத்தை மேலும் நீட்டிக்க தான் விரும்புவதாகவும், போரை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்

## ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்

வாஷிங்டன்:மே.10-

ஈரான் இஸ்ரேல், அமெரிக்கா இடையே கடந்த ஏப்ரல் 8ம் தேதி முதல் தற்காலிக போர் நிறுத்தம் அமலில் உள்ளது. இந்த சூழலில் நேற்று முன்தினம் இரவு ஹார்முஸ் ஜலசந்தியில் மூன்று கடற்படை கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதாகவும் அதனை இடைமறித்து தாக்குதல் நடத்தியதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. மேலும் ஈரான் ராணுவ தளங்களை குறிவைத்து பதிலடி கொடுத்தாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதனிடையே ஐக்கிய அரபு அமீரகமும் ஈரான் தாக்குதல் நடத்தியதாக தெரிவித்துள்ளது. ஈரானின் ஏவுகணை மற்றும் டிரோன்கள் தாக்குதல்களுக்கு தகுந்த பதிலடி கொடுத்து இடைமறிக்கப்பட்டதாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் குறிப்பிட்டுள்ளது. போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒரு ஒப்பந்தத்தை இரு தரப்பினரும் பரிசீலித்து வரும் நிலையில் இந்த தாக்குதல் ஈரான் மற்றும் அமெரிக்கா இடையேயான போர் நிறுத்தத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது

## கார்த்தி படத்தில் நாயகி ஆகிறார் மீனாட்சி சவுத்ரி





கார்த்தி நடிக்கவுள்ள புதிய படத்தின் நாயகியாக மீனாட்சி சவுத்ரி நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

கார்த்தி நடிப்பில் அடுத்த வெளியீடாக 'சர்தார் 2' இருக்கிறது. அதனைத் தொடர்ந்து இயக்குநர் தமிழ் இயக்கத்தில் உருவாகி வரும் 'மார்சல்' படத்தில் கவனம் செலுத்தி வருகிறார். இதனைத் தொடர்ந்து தெலுங்கு படமான 'மேட்' படத்தின் இயக்குநர் கல்யாண் சங்கர் இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தமானார். இதனை சித்தாரா எண்டர்டெயின்மெண்ட்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

இப்படத்தின் பூஜையுடன் கூடிய படப்பிடிப்பு தொடங்கிவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் கார்த்திக்கு நாயகியாக மீனாட்சி சவுத்ரி நடித்து வருவதாக தெரிகிறது. தற்போதுள்ள அரசியல் சூழலால், இப்படத்தை இன்னும் அறிவிக்காமல் இருக்கிறார்கள். இதில் கார்த்தியுடன் முக்கிய கதாபாத்திரத்தில் யோகி பாபு நடிக்கவுள்ளார்.

'மார்சல்' படப்பிடிப்பு தாமதம் ஆவதால், கல்யாண் சங்கர் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பை முடித்துவிட திட்டமிட்டுள்ளார் கார்த்தி. அதனைத் தொடர்ந்து 'மார்சல்' படப்பிடிப்பை முடித்துவிட்டு, மீண்டும் கல்யாண் சங்கர் படத்தில் கவனம் செலுத்தவுள்ளார் கார்த்தி.

## தமிழிலும் அறிமும் ஆகிறார் ரியா ஷிபு



மலையாளத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள நடிகை ரியா ஷிபு, தமிழிலும் அறிமுகமாக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனந்த் ஷங்கர் இயக்கத்தில் விக்ரம் நடிக்கவுள்ள புதிய படம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதில் விக்ரமுடன் நடிக்கவிருப்பவர்கள் தேர்வும் நடைபெற்று வருகின்றன. இப்படத்தில் விக்ரமுடன் முக்கிய கதாபாத்திரத்தில் ரியா ஷிபு நடிக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மலையாளத்தில் மாபெரும் வரவேற்பைப் பெற்ற 'சர்வம் மாயா' படத்தில் நடித்தவர் ரியா ஷிபு. இவர் விக்ரம் நடித்த 'வீர தீர சூரன்' படத்தை தயாரித்த ஷிபு தமீன்ஸின் மகளாவார். தற்போது விக்ரம் நடிக்கவுள்ள படத்தில் நாயகியாக அல்லாமல், முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். இதன் படப்பிடிப்பு ஜூன் மாதத்தில் தொடங்கவுள்ளது.

சத்யஜோதி நிறுவனம் தயாரிக்கவுள்ள இப்படத்தின் ஒளிப்பதிவாளராக ஆர்.டி.ராஜசேகர், இசையமைப்பாளராக சந்தோஷ் நாராயணன் ஆகியோர் பணிபுரியவுள்ளனர். ஒரே கட்டமாக இதன் படப்பிடிப்பை முடிக்க படக்குழு திட்டமிட்டு இருக்கிறது.

## 29 விமர்சனம்

வாழ்க்கையில் எந்தவொரு குறிக்கோளும் இல்லாத 29 வயது சத்யா (விது), கிடைத்த வேலைகளை செய்து, தனக்கான அடையாளம் இல்லாமல் வாழ்ந்து வருகிறார். அவருக்கு திடீரென்று அறிமுகமாகிறார், 21 வயது விஜி என்கிற விஜயலட்சுமி (பிரீத்தி அஸ்ரானி). பிறகு அவர்கள் தங்கள் வயது இடைவெளியை மறந்து காதலிக்கின்றனர். விஜிக்கு வாழ்க்கையை பற்றிய தெளிவான புரிதல் இருக்கிறது. அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதில் கவனமாக இருக்கும் அவர், ஐஏஎஸ் தேர்வு எழுத செல்கிறார். முன்னதாக ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக சத்யாவை விட்டு பிரிகிறார். விஜி மட்டுமே தனது வாழ்க்கை என்றிருந்த சத்யா, அவரால் கிடைத்த மாற்றத்தை ஏற்றாரா? கடைசியில் அவர்கள் இணைந்தார்களா என்பது மீதி கதை.

வழக்கமான காதல் கதைகளில் இருந்து விலகியிருக்கும் வேறொரு பாணி காதல் கதை இது. எழுதி இயக்கியுள்ள எம்.ரத்னகுமார், காட்சிகளை அழகியலுடன் சொல்லி, வசனங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார். ஒருகட்டத்தில் அது ஓவர்டோஸ் ஆகிவிடுகிறது. 'நெக்ஸ்ட் டோர் கேர்ள்' இமேஜை மீண்டும் தக்கவைத்துள்ள பிரீத்தி அஸ்ரானி, நல்ல முதிர்ச்சியான நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். அவருக்கும், விதுவுக்குமான நெருக்கமான காதல் காட்சிகள், ஜென்ஸீ ரசிகர்களுக்கு கூடுதல் போனஸ். கேரக்டரை உணர்ந்து நடித்துள்ள விது, காதல் பிரிவின் வலியை நன்கு வெளிப்படுத்தி இருக்கிறார்.

திடீர் வில்லனாக மாறும் மாஸ்டர் மகேந்திரன், ஏதாவது செய்வார் என்று பார்த்தால், இறுதியில் அமைதியாகி விடுகிறார். தவிர அவினாஷ், ஷெகனாஸ் பாத்திமா, பிரேம் குமார், ஆதிரா பாண்டிலட்சுமி உள்பட அனைவரும் இயல்பாக நடித்துள்ளனர். மாதேஷ் மாணிக்கத்தின் இயல்பான ஒளிப்பதிவும், ஷான் ரோல்டனின் அழுத்தமான பின்னணி இசையும், ஆழமான கருத்துள்ள பாடல்களும் கூடுதல் பலம். பொதுவான காதலை புதிய கோணத்தில் சொல்ல முயன்ற இயக்குனர் எம்.ரத்னகுமார், கதையை 10 அத்தியாயங்களாக பிரித்து சொல்லி, ஆடியன்ஸின் கவனத்தை ஆழமாக பதியச் செய்திருக்கிறார். படத்தின் நீளத்தை யோசிக்காமல் குறைத்திருக்கலாம்.




## கவர்ச்சி புகைப்படங்களை வெளியிட்ட நடிகை பூஜா ஹெக்டே



மிஷ்கின் இயக்கிய 'முகமூடி' படத்தில் அறிமுகமான நடிகை பூஜா ஹெக்டே தமிழ், தெலுங்கு, இந்தி என தற்போது பான் இந்திய நடிகையாக மாறியுள்ளார். கடைசியாக சூர்யாவின் 'ரெட்ரோ' படத்தில் நடித்திருந்தார். அடுத்ததாக, 'கூலி' படத்தில் மோனிகா பாடலுக்கு நடனமாடியிருந்தார். 'ஜன நாயகன்' படம் விரைவில் வெளியாகவிருக்கிறது.

தற்போது, 'ஹாய் ஜவானி டோ இஷ்க் ஹோனா ஹாய்' என்ற இந்தி படத்திலும் நடித்து வருகிறார். இந்த இந்தி படத்தை வருண் தவானின் தந்தை டேவிட் தவான் இயக்கியுள்ளார்.

இந்த நிலையில், தனது இன்ஸ்டா பக்கத்தில் பூஜா ஹெக்டே கவர்ச்சியான புகைப்படங்களைப் பகிர்ந்துள்ளார். இந்திப் படத்தில் இருந்து 'டேரே ஹோ ஜான்' என்ற பாடல் வெளியாகியுள்ளது. இந்தப் பாடலில் அணிந்திருந்த புகைப்படங்களைத்தான் தற்போது பூஜா ஹெக்டே பகிர்ந்துள்ளார். இந்தப் பாடலை பாடியிருந்த ஜோனிடா காந்தி பூஜா ஹெக்டேவின் பதிவில், "ஹாட்டி" எனக் கமெண்ட் செய்துள்ளார்.இந்தப் படம் ஜூன் 5ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவிருக்கிறது.



## அமெரிக்காவில் உருவான ஆன்சைட் அலப்பறைகள்

'கருப்பு வெள்ளை' என்ற இசை ஆல்பத்தை தொடர்ந்து ராம் பிரசாத் பார்த்தசாரதி இயக்கியுள்ள 'ஆன்சைட் அலப்பறைகள்' என்ற ஆல்பம் இம்மாத இறுதியில் வெளியாகிறது. ராம் புரொடக்ஷன்ஸ் தயாரித்துள்ளது. ஆகாஷ் டி.பிரபு, ஸ்ருதி பெரியசாமி நடித்துள்ளனர். எம்.எஸ்.ஜோன்ஸ் ரூபர்ட் இசை அமைக்க, வசந்த் பால் ஒளிப்பதிவு செய்துள்ளார். 'மாலை நேரத்து மயக்கம்' என்ற ஆல்பத்தின் மூலம் இசையுலகிற்கு வந்த ராம் பிரசாத் பார்த்தசாரதி, 'ஸ்டிரிங்க்ஸ் ஆஃப் சைலன்ஸ்' மற்றும் ஐபிஎல் போட்டிக்கு பெப்சி விளம்பரத்தை உருவாக்கியவர்.

அவர் கூறுகையில், 'ஐடி நிறுவனத்தில் பணியாற்றும் இளசுகள், அமெரிக்காவுக்கு ஆன்சைட் சென்று வாழ்க்கையை எப்படி அனுபவிக்கின்றனர் என்பதை இளமை துள்ளலுடன் உருவாக்கியுள்ளேன். ஐடியில் பணியாற்றும் இளசுகள் நடிக்க, அமெரிக்காவில் ஆல்பம் படமாகியுள்ளது. இண்டோ பிரெஞ்ச் இண்டர்நேஷனல் பிலிம் பெஸ்டிவலில் சிறந்த ஆல்பத்துக்கான விருது, ஹை டாட்ராஸ் பிலிம் அண்ட் வீடியோ பெஸ்டிவலில் சிறந்த இயக்குனர், சிறந்த இசை வீடியோவுக்கான விருது பெற்றது. அமெரிக்காவின் எக்ஸ்ஃபிரிமெண்டல் பிலிம் அண்ட் மியூசிக் வீடியோ பெஸ்டிவலில் சிறந்த நடிப்புக்கான விருது கிடைத்தது' என்றார்.

## சந்தானம் நாயகனாக நடிக்கும் புதிய படம் அறிவிப்பு






சந்தானம் நாயகனாக நடிக்கும் புதிய படம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிப்பில் புதிய படம் ஒன்றை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. 'லவ் பைட்' எனப் பெயரிடப்பட்டுள்ள இப்படத்தின் நாயகனாக சந்தானம் நடிக்கவுள்ளார். இதனை 'காஞ்ஜூரிங் கண்ணப்பன்' படத்தின் இயக்குநர் செல்வின் ராஜ் சேவியர் இயக்கவுள்ளார்.

இதில் சந்தானத்துடன் நடிக்கும் நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வு நடைபெற்று வருகிறது. முழுக்க காமெடியை மையமாக வைத்து ஜாம்பி படமாக இது உருவாகிறது என்பது போஸ்டர் மூலம் தெரிகிறது. ஒரே கட்டமாக இதனை படமாக்க படக்குழு திட்டமிட்டு இருக்கிறது.

தற்போது சுதாமன் கிருஷ்ணா இயக்கி வரும் படத்தில் கவனம் செலுத்தி வருகிறார் சந்தானம். அதனை முடித்துவிட்டு 'லவ் பைட்' படத்தில் கவனம் செலுத்துவார் என தெரிகிறது.

## தென்னிந்திய நடிகர், நடிகைகளுக்கு பாலிவுட்டில் அவமரியாதை: சிம்ரன் வேதனை



தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகைகளில் ஒருவராக இருப்பவர், சிம்ரன், சமீபத்தில் அவர் அளித்துள்ள பேட்டியில், பாலிவுட் குறித்து கடும் அதிருப்தி தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:இந்தி திரையுலகை சேர்ந்தவர்கள், தென்னிந்திய நடிகர், நடிகைகளின் உழைப்பையோ அல்லது அவர்கள் பல வருடங்களாக காப்பாற்றி வரும் நற்பெயரையோ கண்டுகொள்வது கிடையாது. என் வாழ்க்கையில் 50 சதவீதத்துக்கு மேல் திரையுலகிற்காக மட்டுமே செலவிட்டுள்ளேன். அப்படி இருந்தும் எனக்கான மரியாதை கிடைக்காதது அதிக வேதனையை தருகிறது.

பாலிவுட் தயாரிப்பாளர்கள் தென்னிந்திய நடிகர், நடிகைகளுக்கான அடிப்படை வசதிகளில் கூட பேரம் பேசுகின்றனர். தங்கும் வசதி, விமான டிக்கெட், உதவியாளர்கள் எண்ணிக்கையில் கஞ்சத்தனம் காட்டுகின்றனர். இத்தனை உதவியாளர்களை அழைத்து வரக்கூடாது என்று கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர். அதனால்தான் எனக்கு பாலிவுட்டில் பணியாற்ற பிடிக்கவில்லை. இதுபோன்ற காரணங்களால் என்னை தேடி வந்த பல இந்தி பட வாய்ப்புகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டேன்.

## துல்கர் சல்மான், கயாடு லோஹர் நடிக்கும் ஐ அம் கேம்: ஆகஸ்ட்டில் ரிலீசாகிறது




துல்கர் சல்மான், கயாடு லோஹர் நடித்துள்ள படம் 'ஐ அம் கேம்'. 'எனது திரையுலக வாழ்க்கையில் இதுவரை நடித்துள்ள படங்களில், மிகவும் ஸ்டைலிஷான படமாக இது இருக்கும்' என்று துல்கர் சல்மான் கூறியுள்ளார். நஹாஸ் ஹிதாயத் இயக்கியுள்ள மிகப் பிரமாண்டமான ஆக்‌ஷன் திரில்லர் படமான இது, வரும் ஆகஸ்ட்டில் உலகம் முழுவதும் திரைக்கு வருகிறது. வேஃபரர் பிலிம்ஸ் சார்பில் துல்கர் சல்மான், ஜோம் வர்கீஸ் இணைந்து தயாரித்துள்ளனர். ஷஹபாஸ் ரஷீத், ஆதர்ஷ் சுகுமாரன் இணைந்து திரைக்கதை எழுதியுள்ளனர்.

முக்கிய வேடங்களில் ஆண்டனி வர்கீஸ், மிஷ்கின், கயாடு லோஹர், கதிர், பார்த் திவாரி, சம்யுக்தா விஸ்வநாதன் நடித்துள்ளனர். ஜேக்ஸ் பிஜாய் இசை அமைக்க, இரட்டையர் அன்பறிவு சண்டை பயிற்சி அளித்துள்ளனர். ஜிம்ஷி காலித் ஒளிப்பதிவு செய்துள்ளார். மனு மஞ்சித், விநாயக் சசிகுமார் பாடல்கள் எழுதியுள்ளனர். சமன் சாக்கோ எடிட்டிங் செய்துள்ளார்.

# மானாமதுரை இளைஞர் உயிரிழப்பு வழக்கு: நீதி கேட்டு உறவினர்கள் தொடர்ந்து போராட்டம்

மானாமதுரை மே.10-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையைச் சேர்ந்த ஆகாஷ் (24) என்பவர் காவல்துறை விசாரணைக்குப் பிறகு உடல்நலக்குறைவு காரணமாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த மார்ச் 8ஆம் தேதி உயிரிழந்தார்.



இந்த உயிரிழப்பு தொடர்பாக சம்பந்தப்பட்ட காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவரது உறவினர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். மேலும், வழக்கில் உரிய நீதி கிடைக்க வேண்டும் என வலியுறுத்தி, ஆகாஷின் உடலை குடும்பத்தினர் இதுவரை பெற்றுக்கொள்ளாமல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அவரது உடல் கடந்த இரண்டு மாதங்களாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு தொடர்பான விசாரணை நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது. சம்பவம் குறித்து பல்வேறு சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் கவனம் செலுத்தி வருகின்றனர்.







■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா கல்வி குழுமத்தில் பழைய மாணவர்கள் 20232024ஆம் கல்வியாண்டில் பயின்ற பத்தாம் வகுப்பு மாணவர்கள் 100% தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரும் இந்த (20252026)கல்வியாண்டில் 12ஆம் வகுப்பில் நற் மதிப்பெண்கள் பெற்று 100% தேர்ச்சியும் பெற்றிருக்கின்றனர்.பள்ளியில் கேக் வெட்டியும் மற்றும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது.இவ்வினிய விழாவில் பள்ளியின் நிறுவனர் அம்மா இராஜேஸ்வரி முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கினார். பள்ளியின் தாளாளர் கபிலன் மற்றும் மீனாட்சி மாணவர்களுக்கு பொன்னாடை அணிவித்தும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் முதல்வர் சாரதா செய்திருந்தார் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.



# விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி

மாதவரம், மே.10-

மாதவரம் தொகுதி பொன்னேரி கல்வி மாட்டத்திற்குட்பட்ட சோழவரம் ஊராட்சி ஒன்றியம் நல்லூர் ஊராட்சி சோலையம்மன் நகர் விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 12ம் வகுப்பு பொது தேர்வில் மொத்தம் 70 மாணவ மாணவிகள் தேர்வு எழுதினர். இதில் 100 சதவீதம் பெற்று 70 மாணவமாணவிகளும் தேர்ச்சி பெற்று உள்ளனர்.பி.கமலேஷ் 580 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும், கே.நித்யா 573 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடமும், பி.சந்தனாஸ்ரீ 561 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடமும் வகிக்கின்றனர். தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவமாணவிகளையும் பள்ளியின் தாளாளர் டாக்டர் மணிவண்ணன், முதன்மை நிர்வாக அதிகாரி அருண்மொழிவர்மன், முதல்வர் செல்வக்குமார், செயலாளர் ஜெயலட்சுமி உள்ளிட்ட சக ஆசிரியர்கள் பாராட்டினர்.

# வலது காலுக்கு பதில் இடது காலில் அறுவை சிகிச்சை

## ராஜஸ்தானில் மருத்துவர் வேறு பணிக்கு உடனடி மாற்றம்

ஜெய்ப்பூர்:மே,10-

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் உள்ள மதுர தாஸ்மாத்தூர் அரசு மருத்துவமனைக்கு சம்பா தேவி (66) என்ற பெண் தனது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்கு சிகிச்சை பெற வந்தார். அவரை பரிசோதித்த போது இரு காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. வலது காலில் அறுவை சிகிச்சை செய்ய தீர்மானிக்கப்பட்டது.கடந்த ஏப்ரல் 27ம் தேதி சம்பா தேவிக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.



இந்நிலையில் எலும்பியல் நிபுணர் ராமகிருஷ்ணன் சவுத்ரி, வலது காலுக்கு பதிலாக இடது காலில் அறுவை சிகிச்சை மேற்கொண்டார். அறுவை சிகிச்சைக்குப் பின்பே இது தெரியவந்தது.இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகம் சிறப்புக் குழு அமைத்து விசாரணை நடத்தியது. அறுவை சிகிச்சையின் போது பின்பற்றப்படும் நிலையான செயல்பாட்டு விதிமுறைகளை (எஸ்ஓபி) பின்பற்றாமல், கவனக்குறைவாக தவறான காலில் அறுவை செய்தது தெரிய வந்தது. இதையடுத்து, மருத்துவர் ராமகிருஷ்ணன் சவுத்ரி பணியில் இருந்து உடனடியாக நீக்கப்பட்டு, மருத்துவக் கல்வித் துறைக்கு மாற்றப்பட்டார்

# விஜய் முதல்வராவதை தடுக்கக் கூடாது: ஆளுநர் மாளிகை முன்பு தவெகவினர் போராட்டம்

சென்னை:மே,10-

தவெக தலைவர் விஜய் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்காத ஆளுநரை கண்டித்து, தவெக தொண்டர்கள் ஆளுநர் மாளிகை முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் விஜய்யின் தவெக 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. இருப்பினும் ஆட்சி அமைக்க தேவையான 118 எம்எல்ஏக்கள் இல்லை.




இதனால், தவெகவால் ஆட்சி அமைக்க முடியாத சூழ்நிலை நிலவியது. இந்நிலையில், திமுக கூட்டணியில்இருந்து விலகி காங்கிரஸ் தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தது.அக்கட்சிக்கு 5 எம்எல்ஏக்கள் உள்ளதால் தவெக எம்எல்ஏக்களின் பலம் 113 ஆக உயர்ந்தது. இதைத் தொடர்ந்து விஜய் தமிழக ஆளுநரை இரண்டு முறை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.

மேலும், பதவி ஏற்புக்கு பின் சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிப்பதாக கூறினார். ஆனால், ஆளுநர் இது வரையில் விஜய்யை ஆட்சி அமைக்க அழைக்கவில்லை. மேலும், திமுகவும், அதிமுகவும் கூட்டணி அமைத்து ஆட்சி பொறுப்புக்கு வர உள்ளதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவியது.இந்நிலையில், விஜய்யை ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்காத ஆளுநரை கண்டித்து தவெக தொண்டர் ஒருவர் ஆளுநர் மாளிகை முன்பு நேற்று சங்கு ஊதி போராட்டத்தில் ஈடுபட்டார்.

விஜய் முதல்வராவதை தடுக்காதே, மறுக்காதே... மறுக்காதே... மக்கள் தீர்ப்பை மறுக்காதே, தடுக்காதே... தடுக்காதே விஜய் முதல்வராவதை தடுக்காதே என சங்கு ஊதி ஆக்ரோஷமாக முழக்கமிட்டார்.இதையடுத்து, அங்கிருந்த போலீஸார் அவரை கைது செய்து அழைத்துச் சென்றனர். இதையடுத்து, விஜய்யை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பு விடுக்க கோரி தவெக தொண்டர் ஒருவர் ஆளுநர் மாளிகை முன்பு காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொள்ள முயன்றார். அவரை போலீஸார் கைது செய்து அப்புறப்படுத்தினர்.இது ஒரு புறம் இருக்க விஜய்க்கு முதல்வராக பதவிப் பிரமாணம் செய்து வைக்க வலியுறுத்தி கையில் பதாகையை ஏந்தி தவெக தொண்டர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மேலும், ஒரு பெண், ஆளுநர் மாளிகை முன்பு வந்து, 'நாடே அழுகிறது... விஜய் முதல்வராக வர வேண்டும்' என கோஷமிட்டவாறு தவெக கொடியுடன் போராட்டத்தில் ஈடுபட்டார். இதுபோன்ற நிகழ்வுகளால் ஆளுநர் மாளிகை பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது

# கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய அதிகாரிகள் தவறு இழைக்கக் கூடாது: ஐகோர்ட் நீதிபதி அறிவுரை

சென்னை:மே,10-

கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ள அதிகாரிகள் அதில் தவறு இழைக்கக் கூடாது என அறநிலையத் துறைக்கு உயர் நீதிமன்றம் அறிவுரை வழங்கியுள்ளது.இதுதொடர்பாக திருத்தொண்டர் அறக்கட்டளை தலைவரான சேலம் ஏ.ராதாகிருஷ்ணன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், 'சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் கோயிலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அறுபத்து மூவர் உலா மற்றும் பிரம்மோற்சவம் போன்ற திருவிழாக்களின் வரவு செலவு கணக்கு விவரங்களை இந்து சமய அறநிலையத்துறையின் தணிக்கை பிரிவு அதிகாரிகள் தணிக்கை செய்து அறிக்கை அளித்துள்ளனர்.



அதில் கோயில் நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக பலமுறை புகார் அனுப்பியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.எனவே, இதுதொடர்பாக உரிய விசாரணை நடத்த அறநிலையத்துறைக்கு உத்தரவிட வேண்டும்' என கோரியிருந்தார். இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபாணி முன்பாக விசாரணைக்கு வந்தது.அப்போது, மனுதாரரின் புகார் பரிசீலிக்கப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும், என அறநிலையத்துறை தரப்பில் உறுதியளிக்கப் பட்டது. அதையடுத்து நீதிபதி, ''அறநிலையத் துறையின் தணிக்கை குழு கோயில் நிர்வாகத்தில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளது என குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

அந்த குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அறநிலையத்துறை ஆணையரது கடமை. குற்றச்சாட்டுகளின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பது சட்டப்பூர்வ கடமையை துறப்பதற்கு சமம்.கோயில் சொத்துகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ள அதிகாரிகள் அதில் தவறு இழைக்கக்கூடாது. எனவே, மனுதாரரின் புகாரை 12 வார காலத்துக்குள் பரிசீலித்து சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என அறிவுறுத்தி, வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டுள்ளார்

# "விபி ஜி ராம் ஜி திட்டம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை" கார்கே குற்றச்சாட்டு

புதுடெல்லி:மே,10-

கிராமப்புற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் மத்திய அரசின் 'விபி ஜி ராம் ஜி' (VB GRAM G) திட்டம் இன்னும் நடைமுறை ப்படுத்தப்படவில்லை என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை மோடி அரசு முழுமையாக கொல்வதற்கு முன்பாகவே, வேலை செய்வதற்கான உரிமையை நசுக்கி, கோடிக்கணக்கான ஏழை மக்களை துன்புறுத்தி வருகிறது.சமீபத்திய அறிக்கையின்படி, 44 லட்சம் குடும்பங்களுக்கு குறைவாகவே வேலை கிடைத்துள்ளது. 67 லட்சம் தொழிலாளர்களுக்கு குறைவாகவே வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. முழுமையாக 100 நாட்கள் வேலைவாய்ப்பைப் பெற்ற குடும்பங்கள் 40.5% ஆக குறைந்துள்ளது. வேலை செய்வோரின் எண்ணிக்கையில் 21.5% சரிவு ஏற்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஒவ்வொரு குடும்பமும் சராசரியாக ரூ.1,221 வருமான இழப்பைச் சந்தித்துள்ளது. வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டமான 'விபி ஜி ராம் ஜி' திட்டம் இன்னும் நடைமுறை றப்படுத்தப்படவில்லை. இதனால், தொழிலாளர்கள் செய்வதறியாது அலைந்து திரியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.ஒருபுறம் மாநிலங்களுக்குச் சேர வேண்டிய கோடிக்கணக்கான ரூபாயை பாஜக அரசு நிறுத்திவைத்துள்ளது. மறுபுறம், ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவிக்கும் மாநிலங்கள் மீது 40% நிதிச் சுமையை அது சுமத்தியுள்ளது.குறிப்பிட்ட சில முதலாளிகளின் நண்பனாக இருக்கும் பாஜக அரசு, ஏழைகளின் உரிமைகளை நசுக்குவதில் முழுமையாக ஈடுபட்டுள்ளது. ஏழைகள் மீது அவர்களுக்கு இருக்கும் உண்மையான எண்ணத்தை இது அம்பலப்படுத்துகிறது" என தெரிவித்துள்ளார்.

# புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி: தமிழகத்தில் மே 12 முதல் எங்கெல்லாம் கனமழை தீவிரம்?

சென்னை: மே,10-

தென்மேற்கு வங்கக் கடலில் 11ம் தேதி புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகிறது. இதன் காரணமாக 12ம் தேதி முதல் தமிழகத்தில் கனமழை தீவிரமடைகிறது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய கேரள கடல் பகுதிகளுக்கு அப்பால் உள்ள லட்சத்தீவு பகுதிகளின் மேல் சுமார் 1.5 கி.மீ. உயரத்தில், ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.மேலும், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய இலங்கை பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி சுமார் 5.8 கிமீ உயரம் வரை நிலவுகிறது. இதன் காரணமாக தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் 11ம் தேதி வாக்கில் ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும்.



மரத்வாடா முதல் கடலோர கர்நாடகா, வட உள் கர்நாடகா மற்றும் மத்திய மகாராஷ்ட்ரா வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதன் காரணமாக இன்று (மே 10) தென் தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், வட தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், 11 தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 12ம் தேதி ஓரிரு இடங்களிலும், 13ம் தேதி வட தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், 14, 15 தேதிகளில் பெரும்பாலான இடங்களிலும் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளையும், நாளை மறுதினமும் ராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.12ம் தேதி நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், 13ம் தேதி சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக் குறிச்சி, கடலூர், மயிலாடுதுறை, விழுப்புரம், நாகப்பட்டினம், மதிருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

14ம் தேதி திருவண்ணாமலை, விழுப்புரம், மயிலாடுதுறை, கடலூர், தஞ்சாவூர் மாவட்டங்கள், மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும். சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருப்பத்தூர், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், ராணிபேட்டை, வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும்.

15ம் தேதி கோவை, மதுரை, தேனி, திண்டுக்கல், திருப்பூர், மற்றும் நாமக்கல் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை முதல் 13ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் வரை குறையக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 75 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 17 செமீ, நாலுமுக்கில் 16 செமீ, காக்காச்சியில் 14 செமீ, மாஞ்சோலையில் 11 செமீ, தென்காசி மாவட்டம் ஆயிக்குடியில் 9 செமீ, தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் 9 செமீ, தென்காசி மாவட்டம் கருப்பாநதி அணை, தூத்துக்குடி மாவட்டம் குலசேகரப்பட்டினம், தென்காசி மாவட்டம் செங்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் தலா 7 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161